# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:63** **தேதி:-02.09.2015**

# பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிய அனைவருக்கும் நெஞ்சு நிறை நன்றி!!!!!!!

அன்பார்ந்த தோழர்களே,

மக்களை வதைக்கும் தவறான கொள்கைகளை அரசாங்கம் கைவிட வேண்டும் என்ற உழைப்பாளி மக்களின் கோபம் இன்று பனிபடர்ந்த இமயம் முதல் வள்ளுவன் சிலையடியில் வீற்றிருக்கும் குமரி முதல் 15 கோடிக்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களின் வேலை நிறுத்தமாய் வெளிப்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்று நிரூபிக்கும் வண்ணம் தமிழகத்திலும், நம் BSNLல் இந்த வேலை நிறுத்தத்தில் பெருமிதத்துடன் பங்கேற்று கம்பீரமாய் உயர்ந்து நின்ற தோழர்கள் அனைவருக்கும் BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக நமது நெஞ்சு நிறை நன்றியினையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம். தமிழகத்தில் இந்த பொது வேலை நிறுத்தத்தில் சுமார் 7,000 தோழர்கள் பங்கு பெற்றுள்ளனர் என்பது நிர்வாக தரப்பில் சொல்லப்படுகிறது. ஒப்பந்த ஊழியர்களும் 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களும் பங்கேறுள்ளனர். பங்கு கடந்த காலங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களை விட இந்த வேலை நிறுத்தத்தில் அதிகப்படியான தோழர்கள் நேரடியாக பங்கு பெற்றுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நமது மனமார்ந்த பாராட்டுக்கள்.

வழக்கம் போல் நமது சங்கத்தின் பெருமைக்கு வலு சேர்க்கும் நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்ட சங்கங்கள் இந்த முறையும் 95 சதமான ஊழியர்களை பங்கேற்க செய்து தொடர் சாதனையை படைத்துள்ளனர். அவர்களுக்கு நமது உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள்.

அது மட்டுமல்லாமல் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து சங்கத்தை சேர்ந்த தோழர்களும் உற்சாகத்துடன் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்றுள்ளனர். மாநிலத்தின் பல பகுதிகளில் இந்த வேலை நிறுத்தத்தினால் பல தொலைபேசி நிலையங்களும், வாடிக்கயாளர் சேவை மையங்களும், அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன. பல தொலைபேசி நிலையங்களுக்கு முன்பாக அனைத்து சங்கங்களை சேர்ந்த தோழர்களும் ஒன்றாக திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். இதர தொழிற்சங்கங்களுடன் இணைந்தும் இதற்கான ஆதரவு இயக்கங்களிலும், நமது தோழர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு பெற்று வெற்றி பெறச்செய்த தோழர்களுக்கும், ஒப்பந்த தொழிலாளர்களுக்கும், இந்த வெற்றிக்காக உழைத்திட்ட அனைத்து சங்க கிளை, மாவட்ட, மாநில மற்றும் அகில இந்திய தலைவர்களுக்கும், நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்கு பெற்ற அதிகாரிகளுக்கும், ஆதரவளித்திட்ட அனைவருக்கும் தமிழ் மாநில சங்கம் மீண்டும் ஒரு முறை நெஞ்சு நிறை நன்றிகளையும், பாராட்டுக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறது.

நமது வாழ்வின் ஒளியாம் BSNLஐ பாதுகாக்கவும், ஒட்டு மொத்த பொதுத்துறைகளை பாதுகாக்கவும், நாட்டு மக்களின் நலனை பாதுகாக்கவும் நடைபெற உள்ள இயக்கங்களில் இதை விட வலுவாக போராட சபதமேற்போம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**